டும் அங்கத்தினர் அவர்களுக்கோ, அல்லது மற்ற இலாக்காக்களுக்கு நடவடிக்கை எடுக்கவோ அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கான விடைகள் அந்த இலாக்காவிலிருந்து இன்னும் ஒரு கேள்விக்குக் கூட வரவில்லை. ஆகவே அவைகளை இந்த அவைக்குக் கொண்டு வர முடியவில்லை. அதுதான் நிலைமை. ஆகவே, ஒவ்வொருவரும் இதுபற்றி கேட்க ஆரம்பித்தால் முடியாது. கேள்விகள் கொடுத்தோம், வரவில்லை என்று சொன்னால், அதை இந்த அவையிலே கேட்கக்கூடாது, பேரவைத் தலைவருடைய அறையிலே கேட்கவேண்டும். ஆகவே, உறுப்பினர்களிடம் பாரபட்சம் காட்டுகின்ற நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மேட்டூர் நகர எல்லையில் பிளாக் 65-ல் ஏழை தொழிலாளர்களுடைய குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்டதும், அவர்களில் மூவரின் உண்ணா விரதமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். 'மேட்டூர் நகர எல்லைக்குட்பட்ட பிளாக் 65-ல் நீண்ட நாளாக செருப்பு தைப்பது, துணி வெளுப்பது, சவரம் செய்வது, வெற்றிலை, பாக்கு பீடி வியாபாரம் போன்ற தொழில் செய்து பல வருடங்களாக அந்த இடத்தில் ஜீவனம் செய்து வரும் ஏழைகளுக்கு மாற்றிடம் அளிக்காமல் கூட 22 குடிசைகளை நகர அமைப்பு சிப்பந்திகள் போலீசை வைத்து இடித்துத் தள்ளி அவர்களுக்குப் பெரும் நஷ்டத்தையும், துன்பத்தையும் உண்டாக்கியிருக்கின்றனர்" என்ற இந்தச் செய்தியையும், "இது போன்ற நிலை ஏற்படக்கூடும் என்று கருதி இந்த ஏழைகளில் மூன்று பேர் 1—3—1970-லிருந்து உண்ணா விரதம் இருந்து வருகின்றனர்" என்ற இந்தச் செய்தி குறித்து விவாதிக்க இந்தப் பேரவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று, ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. உண்ணாவிரதம் போன்றவைகளுக்கு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைப்பது பேரவை நிகழ்ச்சிகளிலே இதுவரையிலும் இல்லாத ஒரு நிகழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கருத்துக்களைக் கூற வாய்ப்பிருப்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) குடியாத்தம் தாலுக்கா மானியப்பட்டு கிராமத்தில் காவல் துறையினர் அத்து மீறி நடந்துகொண்டதாகச் சொல்லப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தபடியாக, திரு வி.கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி இந்த அவையில் விவாதிக்கக்கூடியது